வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திருமதி. எஸ். மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,
ந.க.எண்.1542/DC3/கலைத்திருவிழா/ஒபக/2024, நாள்: 17.10.2024

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வேலூர் மாவட்டம் – பள்ளிக் கல்வி – 2024-25 – 1 முதல் 5 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான குறுவளமைய மற்றும் வட்டார அளவிலான போட்டிகள் – 1 முதல் 12-ம் வகுப்பு வரை மாணவர்களுக்கான வட்டார அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் நடைபெறும் நாட்கள் – சார்பு.

பார்வை :
1. மாநில திட்ட இயக்குநர் செயல்முறைகள் ந.க.எண்:2183/ஆ8/கலைத்திருவிழா/ஒபக/2024, நாள்:30.09.2024.
2. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநரின் கடித ந.க.எண்:2183/ஆ8/கலைத்திருவிழா/ஒபக/2024, நாள்:14.10.2024.

------

பார்வை-1-ல் காணும் செயல்முறைகளின்படி 1 முதல் 5-ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கான குறுவள அளவிலான போட்டிகளை 14.10.2024 முதல் 16.10.2024 வரை திட்டமிட்டு நடத்திடவும். மேலும் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான வட்டார அளவிலான போட்டிகளை பின்வரும் தேதிகளில் நடத்திடவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

| பிரிவு | வட்டார அளவிலான போட்டிகள் நடைபெறும் நாட்கள் | வெற்றியாளர்களின் விவரங்களை EMIS-தளத்தில் உள்ளீடு செய்வதற்கான கடைசி நாள் |
|---|---|---|
| 1 & 2 | 22.10.2024 முதல் 24.10.2024 வரை | 25.10.2024 |
| 3 to 5 | 22.10.2024 முதல் 24.10.2024 வரை | 25.10.2024 |
| 6 to 8 | 15.10.2024 முதல் 17.10.2024 வரை | 18.10.2024 |
| 9 & 10 | 21.10.2024 முதல் 24.10.2024 வரை | 25.10.2024 |
| 11 & 12 | 21.10.2024 முதல் 24.10.2024 வரை | 25.10.2024 |

தற்போது வடக்கிழக்கு பருவமழை காரணமாக 14.10.2024 அன்று 1 முதல் 5-ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு நடைபெறவிருந்த குறுவள அளவிலான போட்டிகள் மற்றும் 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நடைபெறவிருந்த வட்டார அளவிலான போட்டிகள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், 1 முதல் 5-ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கான குறுவள அளவிலான போட்டிகளை 30.10.2024-ற்குள் திட்டமிட்டு நடத்தி, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரங்களை 30.10.2024-ற்குள்ளேயே EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

பின்னர் ஒவ்வொரு குறுவள அளவிலும் ஒவ்வொரு போட்டியிலும் முதல் இடம் பெற்ற மாணவர்களுக்கு வட்டார அளவிலான போட்டிகளை 07.11.2024-ற்குள் திட்டமிட்டு நடத்தி,

வட்டார அளவிலான போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவர்களின் விவரங்களை EMIS தளத்தில் 08.11.2024-ற்குள் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

மேலும், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான வட்டார அளவிலான போட்டிகளை 07.11.2024-ற்குள் திட்டமிட்டு நடத்தி, வட்டார அளவிலான போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவர்களின் விவரங்களை EMIS தளத்தில் 08.11.2024-ற்குள் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

பார்வையில் காணும் செயல்முறையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளையும் தவறாமல் பின்பற்றி 1 முதல் 5-ம் வகுப்பு மாணவர்களுக்கான குறுவள அளவிலான போட்டிகளையும் மற்றும் 1 முதல் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கான வட்டார அளவிலான போட்டிகளையும் 07.11.2024-ற்குள் திட்டமிட்டு நடத்திடும்படியும் மேலும், வட்டார அளவிலான போட்டிகளின் வெற்றியாளர்களின் விவரங்கள் EMIS தளத்தில் 08.11.2024-ற்குள் பதிவேற்றம் செய்யப்படுவதை உறுதி செய்யுமாறு அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளி கல்வி
வேலூர் மாவட்டம்.

பெறுதல் :

1. அனைத்து அரசு தொடக்க நிலை / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
5. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு).